| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம்**<br>**வடக்குமாகாணம்**<br>**Provincial Department of Education**<br>**Northern Province** | |
| | **இரண்டாம் தவணைப் பரீட்சை- 2022** | |
| **தரம்10**<br>**Grade :- 10** | **வணிகக்கல்வியும் கணக்கீடும் II** | **நேரம்**<br>**2 மணித்தியாலம்** |
| **சுட்டெண் ...............................** | **60 T II** | **மேலதிக வாசிப்பு நேரம்**<br>**10 நிமிடங்கள்** |

- ❖ **முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- ❖ **விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.**

**பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையான வினாக்களுக்கு விடை தருக.**

துசாரா சமையல் கலையில் டிப்ளோமா பட்டம் பெற்றவராவார். தற்காலத்தில் இளைஞர் யுவதிகளின் உணவு தொடர்பான வேறுபட்ட விருப்பங்களின் போக்குகளை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தனது பிரதேசத்தில் காணப்படும் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் துசா உணவகம் என்னும் பெயரில் வணிகமொன்றை ஆரம்பித்தார். இவர் 01.01.2022 இல் ரூ 10 000 மாத வாடகையில் கடை ஒன்றினை வாடகைக்கு பெற்று ஆரம்ப மூலதனமாக ரூ 100 000 இனை இட்டதுடன் வணிக வங்கியொன்றிலிருந்து ரூ 50 000 கடன் ஒன்றினையும் பெற்றிருந்தார்.

❖ ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| 03.01.2022 | உணவு தயாரிப்பதற்கான உபகரணங்கள் கொள்வனவு | ரூ 25 000 |
| 05.01.2022 | உணவு தயாரிப்பதற்கான பொருட்கள் கொள்வனவு | ரூ 30 000 |
| 12.01.2022 | மின்சாரக் கட்டணம் செலுத்தியது | ரூ 2 000 |
| 18.02.2022 | ஊழியர் சம்பளம் கொடுத்தது | ரூ 10 000 |
| 25.01.2022 | விற்பனை வருமானம் பெற்றது | ரூ 40 000 |
| 30.01.2022 | கடை வாடகை செலுத்தியது | ரூ 8 000 |

துசா வணிகம் மேலும் விரிவடைந்த காரணத்தினால் எதிர் காலத்தில் மேற்படி வணிகத்தை வரையறுத்த பொறுப்பு மற்றும் சட்ட ஆளுமையுடையதுமான அமைப்பொன்றாக ஆரம்பிக்க எண்ணினார்.

(1) (அ) துசா வணிகத்தை உற்பத்தி தன்மை அடிப்படையில் எவ்வகை வணிகமெனக் குறிப்பிடுக.
(ஆ) துசா வணிகத்தை உடைமை அடிப்படையில் எவ்வகை வணிகமெனக் கருத முடியும்?

(2) துசா வணிகத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை குறிப்பிடுக.
(அ) பலம் (ஆ) வாய்ப்பு
(ஆ) துசா வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர்கள் இருவரைக் குறிப்பிடுக.

(3) (அ) துசா வணிகத்தை பதிவு செய்வது தொடர்பான உமது கருத்தினைக் குறிப்பிடுக.
(ஆ) தற்போதைய நிலையில் துசா வணிகத்தின் அனுகூலங்கள் இரண்டு தருக.

(4) (அ) துசாரா எதிர்காலத்தில் எவ்வகை வணிகத்தினை ஆரம்பிக்க எண்ணுகின்றார் என்பதைக் குறிப்பிடுக.
(ஆ) நீர் குறிப்பிடும் வணிகத்தினால் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(5) 01.01.2022 இல் துசா வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகைகளுடன் தருக.

(6) மேற்படி வணிகத்திலிருந்து பின்வரும் விடயங்களுக்கு உதாரணம் தருக.
(அ) நடைமுறைச் சொத்து (இ) நடைமுறைப்பொறுப்பு

(ஆ) நடைமுயைல்லாச் சொத்து (ஈ) நடைமுறையல்லாப் பொறுப்பு

(7) காசுக் கணக்கினைத் தயாரித்து காசு மீதியினைக் கணிப்பிடுக.

(8) காசுக் பெறுவனவு, கொடுப்பனவுகளுக்குரிய மூல ஆவணங்களைக் குறப்பிடுக.

(9) துசா வணிகத்திலிருந்து பின்வரும் கணக்கீட்டுக் கூறுகளுக்கு உதாரணம் தருக.

(அ) வருமானம் (ஆ) செலவுகள்

(10) 25.01.2022 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டைப்பதிவினைக் குறிப்பிடுக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி I – வணிகக்கல்வி**

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக)**

(2)

i. (அ) வணிகம் என்றால் என்ன?

(ஆ) மனித தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

a) இலத்திரனியல் ஊடகங்களின் வளர்ச்சி காரணமாக இன்று முழு உலகுமே ' உலகக் கிராமம்' என்னும் நிலைக்கு மாறியுள்ளது. (……..)

b) அனைத்து சில்லறை வியாபார நிறுவனங்களும் பொருள் உற்பத்தி வணிகங்களாகும். (…….)

c) தேவைகள் நபருக்கு நபர் வேறுபடும். (…….)

d) நாடொன்றின் பொருளாதார விருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுப்பது சமூகமாகும். (…….)

(02 புள்ளிகள்)

iii. பிரசாத் என்பவர் வாழை மர உற்பத்திகளை மேற்கொள்ளும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் வாழை இலைகளைப் பதப்படுத்தி உணவு பொதி செய்யும் தாள்களை தயாரித்து அவற்றினை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவகங்களுக்கு விற்பனை செய்து வருகின்றார்.

(அ) பிரசாத் வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர்கள் **இருவரை** சம்பவத்திலிருந்து குறிப்பிடுக.

(ஆ) மேலே குறிப்பிட்ட அக்கறை செலுத்தும் தரப்பினர்கள் வணிகத்தில் அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் ஒவ்வொன்று குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv. வுணிகமொன்றின் அகப், புறச் சூழலுடன் தொடர்புபடும் காரணிகள் சில கீழே தரப்படுகின்றது. வரவு செலவுத்திட்டக்கொள்கைகள், உரிமையாளர், பொது சுகாதாரப் பரிசோதகர், ஊழியர்கள், வழங்குநர்கள், 1954 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க கடை காரியாலய ஊழியர் சட்டம், முகாமையாளர், நவீன தொடர்பாடல் தொழில் நுட்பம்)

மேலே தரப்பட்டவற்றை கீழ்வரும் அட்டவணைக்கமைய வகைப்படுத்திக் காட்டுக.

| அகச்சூழல் காரணிகள் | புறச்சூழல் காரணிகள் |
|---|---|
| | |

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

(3)

(i) (அ) பொருள் உற்பத்தி வணிகங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
(ஆ) வணிகங்களில் சட்டதிட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

a) வுணிகமொன்றில் இடம்பெறும் உடல், உள ரீதயான பங்களிப்புக்கள் 'உழைப்பு' என அழைக்கப்படும். (……...)

b) நாடொன்றின் வருமானப்பரம்பல் அரசியல் சூழல்க் காரணியாகும். (……..)

c) வணிகமொன்றின் புறச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் பலங்களை அறிந்து கொள்ள முடியும். (……..)

d) பொருட்கள், சேவைகளது பொதுவிலை மட்டங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லல் நிறைதொழில் மட்டமாகும். (…….)

(02 புள்ளிகள்)

(iii) வணிகப் பெயர்கள் சில கீழே தரப்படுகின்றன.

a. சாரதிகள் பயிற்சிக் கல்லூரி

b. மலரவன் பற்சிகிச்சை நிலையம்

c. கவிதா மணப்பெண் அலங்கார நிலையம்

d. சிறுவர் பூங்கா

மேற்குறிப்பிட்ட வணிகங்களால் நிறைவேற்றப்படும் தேவைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) கமலும் விமலும் இணைந்து கைப்பைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ரூபா 500 0000 இனை இட்டு ஆரம்பித்திருந்தனர்.

a) மேற்படி வணிகத்தை உடைமை அடிப்படையில் எவ்வகையான வணிகமென வகைப்படுத்திக் காட்டுக.

b) நீர் மேலே குறிப்பிட்ட வணிகத்தின் அனுகூலங்கள் இரண்டு தருக.

(4)

i. (அ) தனியுடைமை வணிகத்தை வரையறுக்க.
(ஆ) மேற்குறித்த வணிகத்தின் இரண்டு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

a) உடைமை அடிப்படையில் வகைப்படுத்தும்போது கூட்டுறவு வணிகம் பொதுத்துறை வணிகத்துக்குள் உள்ளடங்கும். (…….)

b) பங்குடமை வணிக அமைப்பில் பங்காளர்கள் பலர் இருப்பதனால் கூட்டாகச் சேர்ந்து மிகச் சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வாய்ப்புக்கள் குறைவாக காணப்படும். (…….)

c) இலங்கை போக்குவரத்து சபையினால் உழைக்கப்படும் இலாபமானது பொது மக்களுக்குரியதாகும்.

d) பங்குடமை வணிகத்தின் ஆரம்ப மூலதனம் ரூபா 1000 அல்லது அதற்கு மேற்படின் ஒப்பந்தம் எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என மோசடித் தவிர்ப்புச் கட்டளைச் சட்டம் குறிப்பிடுகின்றது. (........)

(02 புள்ளிகள்)

iii. வணிகப் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் எவ்வகை வணிக அமைப்பைச் சார்ந்தது எனக் குறிப்பிடுக.

அ) பட்டயக் கணக்காளர்கள் சிலர் கணக்காய்வு நிறுவனம் ஒன்றை அமைத்தல் -

ஆ) இலங்கை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் -

இ) இலங்கை சுகாதாரத் திணைக்களம் -

ஈ) இலங்கை துறைமுக அதிகார சபை

(02 புள்ளிகள்)

iv. பாடசாலை ஒன்றின் உயர்தர வணிக மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "சிற்றுண்டிச்சாலை" ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள "ஸ்ரார்" கம்பனியால் விநியோகிக்கப்பட்ட பேனைகளுக்கு மிகவும் உயர்வான கேள்வி காணப்பட்டது.

மேலே தரப்பட்ட சம்பவத்திலிருந்து கீழே A, B, C, D ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் வீதம் தருக.

A - சேவை வழங்கும் வணிகம் -

B - சங்கங்கள் -

C - தனியார் உடமை வணிகம் -

D - பொதுத்துறை வணிகம் - (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## பகுதி II – கணக்கீடு
## (இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

(5)

(i) (அ) 'வணிகக் கொடுக்கல் வாங்கல்' என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) சொத்துக்களுக்கான இரட்டைப் பதிவுத் தத்துவத்தினைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ii) வணிகமொன்றில் பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் பேணப்படுகின்னறன.

1) கடன்பட்டோர் கணக்கு
2) காப்புறுதிக் கட்டணக் கணக்கு
3) வங்கிக் கடன் கணக்கு
4) இயந்திரக் கணக்கு
5) பற்றுக் கணக்கு
6) கடன்கொடுத்தோர் கணக்கு
7) சம்பளக் கணக்கு
8) மூலதனக் கணக்கு

மேலே தரப்பட்ட கணக்குகளை கீழே தரப்பட்ட தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

i. சொத்துக் கணக்குகள்
ii. பொறுப்புக் கணக்குகள்
iii. செலவினக் கணக்குகள்
iv. உரிமைக் கணக்குகள் (02 புள்ளிகள்)

(iii) (அ) பின்வரும் கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டை விளைவுகளைக் குறிப்பிடுக.

1. உரிமையாளரால் ரூ 100 000 மூலதனமிடப்படல் .
2. சம்பளம் செலுத்தியது ரூ 30 000

(ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டை பதிவினைக் குறிப்பிடுக.

1. உரிமையாளர் தனக்கு சொந்தமான ரூ 500 000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்றை ஈடுபடுத்தினார்.
2. கடன்கொடுத்தோருக்கு காசு செலுத்தியது ரூ 8 000

(04 புள்ளிகள்)

(iv) சஜித் வணிகத்தில் ஜனவரி 2022 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்படுகின்றன.

1. மூலதனமிட்டது ரூ 50 000.
2. கடனடிப்படையில் பொருட் கொள்வனவு ரூ 10 000.
3. ரூ 2000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் ரூ 3000 க்கு விற்பனை செய்யப்பட்டது.
4. மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ 4 000.

**வேண்டப்படுவது:**

மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை பின்வரும் மாதிரியைப் பயன்படுத்திக் காட்டுக..

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் | | உரிமை | பொறுப்பு |
|---|---|---|---|---|
| | சரக்கிருப்பு | காசு | மூலதனம் | கடன்கொடுத்தோர் |
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

(6)

i) (அ) காசேட்டின் இரட்டைத் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.
(ஆ) காசுக்கழிவின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) விமலன் வணிகத்தின் 2021 ஆம் ஆண்டிற்குரிய தகவல்கள் சில கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 2021.01.01 இல் மூலதனம் | ரூ 430 000 |
| நிதியாண்டு வருமானங்கள் | ரூ 240 000 |
| நிதியாண்டு செலவினங்கள் | ரூ 150 000 |
| மேலதிக மூலதனம் இட்டது | ரூ 60 000 |

❖ 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உரிமையாளரின் உரிமையைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

iii) மானசா வணிகத்தின் 2020 ஜனவரி 01 ஆந் திகதி காணப்பட்ட மீதிகள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| காசு மீதி | ரூ 17 000 | மூலதனம் | ரூ 200 000 |
| கடன்கொடுத்தோர் கனிகா | ரூ 24 000 | கடன்பட்டோர் சவிதா | ரூ 52 000 |

ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில வருமாறு

(1) 2020/01/02 சரக்கிருப்பு கொள்வனவு ரூ. 58 200
(2) 2020/01/05 மேலதிக மூலதனமிட்டது ரூ. 50 000
(3) 2020/01/10 சவிதாவிடமிருந்து ரூ 20 000 கடன் பெறுவனவின்போது அனுமதித்த கழிவு 5 % நீக்கிக் காசு பெறப்பட்டது
(4) 2020/01/13 கனிகாவிற்கு கொடுத்த பணம் ரூ 10 000. பெற்ற கழிவு 5% காசுக் கணக்கினைத் தயாரிக்க. (02 புள்ளிகள்)

iv) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளில் பதிந்து காட்டுக.

| | | |
|---|---|---|
| 01.02.2022 | சந்தியாவிற்கு விற்பனை | ரூ 10 000 |
| 03.02.2022 | அமலாவிடம் கொள்வனவு | ரூ 12 000 |
| 05.02.2022 | காசுக்கு விற்பனை | ரூ 24 000 |
| 07.02.2022 | சம்பளக் கொடுப்பனவு | ரூ 15 000 |

(04 புள்ளிகள்)

07)

i) (அ) மூல ஆவணங்கள் என்றால் என்ன?
(ஆ) சில்லறைக் காசு வசக்கட்டு என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

ii) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஆர்த்தி ஆடை உற்பத்தி நிறுவனத்தில் இடம்பெற்றவையாகும்.
1) காசு விற்பனைகள் ரூ 20 000
2) காசோலை மூலம் சம்பளக் கொடுப்பனவு ரூ 5 000
மேற்குறித்த கொடுக்கல் வாங்கலுக்குரிய மூல ஆவணத்தையும், மூலப் பதிவேட்டையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iii) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் விமல் வணிகத்தில் 2021 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றன.

| | |
|---|---|
| 2021.04.01 | ரூ 25000 வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. |
| 2021.04.07 | கடன்பட்டோரான கண்ணனிடமிருந்து கிடைக்கப் பெற்ற 045 இலக்கம் கொண்ட காசோலை ரூ 6000 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. |
| 2021.04.11 | விற்பனைக்காக கிடைக்கப்பெற்ற (040 இலக்கம் கொண்ட காசோலை) ரூ 25000 பெறுமதியான காசோலை ஒன்று அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 2021.04.20 | மின்சாரக் கட்டணமாக 025 ஆம் இலக்கம் கொண்ட ரூ 6000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. |

மேற்குறிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிந்து காட்டுக.

(04 புள்ளிகள்)

iv) திலீப் வணிகத்தில் 2020 மே மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

2020/05/01 சிலறைக் காசு மீதி ரூ 250
2020/05/01 சில்லறைக்காசு கட்டுநிதி மீள்நிரப்பல் ரூ 2 250
2020/05/03 உபசரனைச் செலவு ரூ 150
2020/05/04 போக்குவரத்துச் செலவு 160
2020/05/06 முத்திரைக் கட்டணம் ரூ 125
2020/05/07 நானாவிதச் செலவு ரூ 130
2020/05/09 ரங்கனுக்குச் செலுத்தியது ரூ 700
2020/05/10 காகிதாதி கொள்வனவு ரூ 250
2020/05/14 தபால் செலவு ரூ 100
2020/05/18 குளிர்பானச் செலவு ரூ 145
2020/05/20 பேரூந்துக் கட்டணம் ரூ 200
2020/05/23 போட்டோ பிரதிச் செலவு ரூ 120
2020/05/28 முத்திரைக் கட்டணம் ரூ. 75

- சில்லறைக் காசேட்டினைத் தயாரித்து 01.06.2020 இல் மீள் நிரப்பல் தொகையினைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)